**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT MUNSIF JUDGE, KANNIYAKUMARI AT NAGERCOIL.**

# O.S.No. 110/2018

<u>Deposition of the witness</u>: DW2

Date: 30.06.2026

Solemnly affirmed by Mr.K.Bibin Raj Clerk in accordance with the provision of Act X of 1873

| | |
|---|---|
| Name | சிவகுமார் |
| Father's Name | கணபதி |
| Village | மாறாயபுரம் |
| Taluk | விளவங்கோடு |
| Calling | வழக்கறிஞர் |
| Age | 55 |

நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஆவேன். 21.08.2021 அன்று காலை 10.30 மணிக்கும், 11.12.2021 மதியம் 3 மணிக்கும் வழக்கு சொத்தை தாலுக் சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்தேன்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது அறிக்கையில் முதலாவது பாயிண்டில் எ பட்டிகை சொத்தில் 43 அடி நீளத்திலும் 6 அடி அகலத்திலும் கிடப்பில் பாதை அமைந்துள்ளது, இங்கு பாதை சரியாக அமைந்துள்ளது என வாதி மற்றும் பிரதிவாதிகளும் அவர்களது வழக்கறிஞர்களும் தெரிவித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. மேற்படி விவரத்திற்கு எழுத்துபூர்வமான குறிப்பாணையை தரப்பினர்களிடம் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை வாய்மொழியாக சொன்னார்கள்.

உண்மையில் மேற்படி விரத்தை பிரதிவாதிகளோ வழக்கறிஞர்களோ சொல்லவில்லை என்றாலும் வாதிக்கு ஆதரவாக அந்த விவரத்தை நான் சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு எ

மற்றும் பி பட்டிகை சொத்தை வழக்கில் சேர்த்ததாக நான் தெரிந்துகொண்டேனா என்றால் பாகபிரிவினை பத்திரம் 26.08.1957 ம் தேதியே பாகபிரிவினை பத்திரத்தை வாதி எனக்கு கொடுத்தார் நான் படித்து பார்த்தேன், அதனை நான் எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை. தாலுக் சர்வேயர் தயார் செய்து கொடுத்த வரைபடத்தின் அடிப்படையில் எனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அவர் எந்த ஆவணத்தின் அடிப்படையில் வரைபடத்தை தயார் செய்தார் என்ற விவரத்தை என்னிடம் சொல்லவில்லை என்றால் சர்வே வரைபடத்தை வைத்து தயார் செய்ததாக சொன்னார் அதனை அவரது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை.

அவரது வரைபடத்துடன் சர்வே வரைபடத்தை இணைத்து கொடுத்தாரா என்றால் இல்லை. வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள ABCEF என்பது எந்த சொத்தை குறிக்கிறது என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல வாதி மற்றும் பிரதிவாதி சொத்தை குறிக்கிறது. அறிக்கை பாரா 4ல் வழக்கு சார்ந்த வரைபடத்தில் ABCD என்பது வாதியின் வீடு. பிளானில் குறிப்பிடவில்லை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதி அவரது பத்திரத்தை என்னிடம் கொடுத்தார். அதில் பிரதிவாதிக்கு தெற்கு பக்கம் கிழமேல் பாதையை சேர்த்து 4 சென்ட் உரிமை என்று தெரிந்து கொண்டேன். அறிக்கை பாரா 5ல் பிரதிவாதியின் 4 சென்ட் சொத்து என்பது வழக்கு எ பட்டிகை சொத்தின் ஒரு பகுதி ஆகும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி.

எனது அறிக்கையில் பக்கம் 4ல் FGCH பகுதி என்பது பிரதிவாதியின் 4 சென்ட் பகுதிக்குள் வருகிறது என்றால் சரியல்ல. பாதையின் தென்கிழக்கின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து கட்டியுள்ளார். பாதையின் தென்கிழக்கின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து கட்டியுள்ளார் என்ற விவரத்தை எனது அறிக்கையில் எங்கு சொல்லியுள்ளேன் என்றால் பாயிண்ட் 3 பக்கம் 4ல் சொல்லியுள்ளேன். பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்த பகுதியின் அளவு என்ன என்றால் பிரதியின் வீடு 3.557 சென்ட்டும் பாதை 0.395 சென்ட்டும் ஆக்கிரமிப்பு பகுதி 0.148 சென்ட் சேர்த்தால் 4 .100 சென்ட் உள்ளது. பிரதியின் வீடு மையபகுதியிலும் அதனை சுற்றி காம்பவுண்ட் சுவரும் உள்ளது என்றால் சரி. மேற்படி விவரத்தை எனது அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

நான் அறிக்கையில் சொல்லியுள்ள கோயில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்ற விவரம் என் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரி. 1957 பாக பத்திரத்தில்

வழக்கு எ மற்றும் பி பட்டிகை சொத்து துலங்காது என்றால் சரியல்ல. 1957 பாகபத்திரத்தில் பாதையானது ஒருவழி பாதையாக விவரிக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக ஆக்கிரமிப்பு பகுதியை காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தானது குளச்சல்-ராஜாக்கமங்கலம் ரோட்டில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிராக செல்லும் கணபதிபுரம் மெயின்ரோட்டில் அமைந்துள்ளது. மெயின்ரோட்டில் இருந்து வழக்கு சொத்தில் செல்வதற்கு 7 அடி பாதை உள்ளது என்றால் தெற்கில் இருந்து வடக்காக சென்று மேற்கில் திரும்பி பின்பு வடக்கு நோக்கி 6 அடி பாதை செல்கிறது. அந்த 6 அடி பாதை வழியாக வாதி இருசக்கர வாகனத்தில் அவரது வீட்டிற்கு சென்று வருகிறார் என்றால் 6 அடி பாதையில் ஆக்கிரமிப்பு உள்ளதால் வாதியால் சரிவர சென்று வர இயலவில்லை. 6 அடி பாதை முடிந்தஉடன் 2½ சென்ட்டில் அவகாசிகளுக்கு மட்டும் கார் நிலுத்தும் இடம் உள்ளது என்றால் சரி.

வாதிக்கு ஆதரவாக அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிரதி பாதையை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி மற்றும் பிரதியின் ஆவணங்களை ஆய்வின் போது படித்து பார்த்ததாக எனது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரி. உண்மையில் நான் ஆவணங்களை படித்து பார்க்கவில்லை என்பதால் சொல்லவில்லை என்றால் சரியல்ல.வாதிக்கு ஆதராவாக ஒருதலைபட்சமாக எனது அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.